**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**OS No: 27/2021**

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம் நாள் **Dw**1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**Dw**1(ராபியா) நாள் 27.01.2026

**குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)**

தாவாவிற்கு முன்பு வாதி தரப்பில் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் 22.2.2021 ல் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை பெற்றுக் கொண்ட பின் நான் வழக்கறிஞரை சந்தித்தேனா என்றால் இல்லை. அதில் வேறு பெயர் இருந்ததால் நான் சந்திக்கவில்லை. பின் 2ம் முறை அறிவிப்பு வந்த பின் தான் வழக்கறிஞரை சந்தித்தேன். முதலில் வந்த அறிவிப்பை படித்துப் பார்த்து அதற்கு நான் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் முதலில் வந்த அறிவிப்பு எனக்கு தொடர்பில்லாததுபோல் இருந்ததால் நான் பதில் அனுப்பவில்லை. இந்த வழக்கின் எதிர்வழக்குரையில் எனக்கு வந்த அறிவிப்பு தொடர்பில்லாதது என சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கிரே நகர் விலாசத்தில் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருகிறேன். பெருந்துறை சீனாபுரத்தில் சென்னை பேக்கரி என்ற பெயரில் 15 ஆண்டுகளுக்கு முன்பு நான் ஆரம்பித்தேன் என்றால் சரி. 2016 ம் ஆண்டு அந்த கடையை சீனாபுரத்திலிருந்து கிரே நகருக்கு மாற்றினேன் என்றால் சரிதான். 2016 ம் ஆண்டு ஜீலை மாதம் சீனாபுரத்திலிருந்து கிரேநகரில் உள்ள கே கே மணி என்பவரின் கட்டிடத்திற்கு மாற்றினேன் என்றால் சரிதான். நான் கிரே நகரில் குடியிருக்கும் வீடு என் கணவருக்கு பாத்தியப்பட்ட வீடு என்றால் சரி. எனது மாமனார் பெயர் ஜோசப். என் மாமியார் பெயர் சுலோன்மணி. என் மகள் பெயர் ரையதுல் அப்சரா,மகன் பெயர் அமீத் கான். என்னிடம் காண்பிக்கப்படுவது எனது குடும்ப அட்டையின் நகல் என்றால் சரிதான். அது **வாசாஆ** 5. சாட்சி முன்வந்து மேற்படி ஆவணத்தில் திருமணத்திற்கு முன்பு தனது மாமனார் பெயர் சேர்க்க வேண்டும் என கேட்டு பெயர் சேர்க்கப்பட்டதாக சொல்கிறார். மேற்படி குடும்ப அட்டையில் எனது மகன் மற்றும் மகள் பெயரை

2011 ம் ஆண்டு நான் சேர்ந்தேன் என்றால் சரி. குடும்ப அட்டையில் எனது பெயர் ராபிகா என்றும், என் கணவர் பெயர் ரகுமான் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராபிகா மற்றும் ராபியா என்பது என்னை தான் குறிக்கும் என்றும் ராபிகா என்ற பெயர் எனக்கு தொடர்பில்லை என வழக்கிற்காக பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா கடனுறுதி சீட்டை நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்து பார்வையிட்டேன் என்றால் சரிதான். கடனுறுதி சீட்டை பார்வையிட்டபின் கடனுறுதி சீட்டில் உள்ளகையொப்பம் என்னுடையதல்ல என கையெழுத்து நிபுணருர் பரிசோதணைக்கு உட்படுத்த நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 2018 ம் ஆண்டு கிரே நகரில் கே கே மணி என்பவரின் கட்டிடத்தில் இருந்து எனது பேக்கரி கடையை வேறு விலாத்திற்கு அதே ஊரில் மாற்றினேன் என்றால சரிதான். அவ்வாறு 2018 டிசம்பர் மாதம் நான் பேக்கரி அமைப்புடன் தொடங்கினேன் என்றால் சரிதான். எனக்கு வாதியை தெரியாது என்றும் அவரிடம் பணம் வாங்க வேண்டிய அவசியமில்லை என பொய் சொல்கிறேன் என்றும் 2018 ம்ஆண்டு அவ்வாறு கே கே மணியின் கட்டிடத்திலிருந்து எனது பேக்கரியை இடம் மாற்றம் செய்யவும் புதிதாக பேக்கரி தொழிலை தொடங்கவும் நான் வாதியிடம் பணம் கடனாக பெற்றேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படுவது எனது வருமான வரி அடையாள அட்டை நகல் என்றால் சரி. அது **வாசாஆ 6.** நான் சென்னை பேக்கரி நடத்தி வந்ததற்கான உணவு பாதுகாப்பு துறையால் வழங்கப்பட்ட பதிவு சான்று என்றால் சரிதான். அது **வாசாஆ 7**. எனது வங்கி கணக்குப் புத்தகத்தின் முதல் தாள் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரி. அது **வாசாஆ 8**. இந்த வழக்கில் வாதி கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பத்தை ஆய்விற்கு உட்படுத்த மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மனுவில் எனது ஒப்புக் கொள்ளப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய ஆவணத்தை முன்னிலைபடுத்த குறிப்பாணை தாககல் செய்யப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த குறிப்பாணைக்கு நான் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது ஒப்புக் கொள்ளப்பட்ட கையொங்கள் அடங்கிய ஆவணங்கள் என்னிடம் இல்லை என அதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் எனது ஒப்புக் கொள்ளப்பட்ட கையொங்கள் அடங்கிய ஆவணங்கள் இருந்தபோதிலும் என்னிடம் ஆவணங்கள் எதுவும்இல்லை என மறுப்பு

தெரிவித்துள்ளேன் என்றும், கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடையது என்பதால் தான் எனது ஒப்புக் கொள்ளப்பட்ட ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தவில்லை என்றால் சரியல்ல. எனக்கு கிரே நகர் விலாசத்தில் பட்டா வழங்கப்பட்டு நான் தற்போது அதில் வீடு கட்டி வருகிறேன் என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் வாதி எனக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி படைத்தவர் அல்ல என பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். வாதி தற்போதும் கால்நடைகளை வைத்து பராமரித்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு வருமானம் இல்லை என்றும் பணம் கொடுக்கும் அளவிற்கு வசதியில்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை பத்தி 7 ல் தாவா கடனுறுதி சீட்டில் உள்ள சாட்சி மற்றும் எழுதியவர் யார் என்று தெரியாது என்றும் பின்னிட்டு அவர்கள் எனக்கு வேண்டாதவர்கள் ஆவர் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கடனுறுதி சீட்டில் உள்ள சாட்சி மற்றும் எழுதியவர் எனக்கு தெரிந்தவர்கள் தான் என்றும் வழக்கிற்காக அவர்களை பற்றி நான் பொய்யாக முரண்பட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதியிடம் கடன் பெற்றுக் கொண்டு அந்த கடனை ஏமாற்றுவதற்காக போலியாக கடனுறுதி சீட்டு தயாரிக்கப்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் கடன் வாங்கவில்லை என்றாலோ ஆவணம போலியாக தயாரித்திருந்தாலோ வழக்கறிஞர் அறிவிப்புக்கு பதில் அனுப்பியிருப்பேன் என்றும் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு கடனுறுதி சீட்டை பார்வையிட்ட பின்னரும் கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை என்னுடையதல்ல என்றும் ஆய்வுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. கோடாப்புலியூர் மற்றும் கைகோளபாளையம் எனது வீடு மற்றும் கடையிலிருந்து 5 கி மீட்டர் சுற்றளவு தான் உள்ளது என்றால் சரிதான். எனது இயற்பெயர் மற்றும் அழைக்கும் பெயர் ஆகியவற்றிற்கு இடையே உள்ள வேறுபாட்டை பயன்படுத்திக் கொண்டு கடனுறுதி சீட்டில் உள்ள எனது பெயர் மற்றும் என் கணவர் பெயர் அல்ல என பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் கணவரின் இயற்பெயர் சாமுவேல் தங்கதுரை என்றால் சரி. என் கணவர் பெயர் மாற்றம் குறித்து சட்டப்பூர்வ ஆவணம் உள்ளதா என்றால் அவர் 10 ம் வகுப்பு

படிக்கும்போதே பெயரை மாற்றி கொண்டதாக கூறுகிறார். என் கணவர், என் மாமனார் , மாமியார் மற்றும் குழந்தைகள் கூட்டுக் குடும்பமாக தான் உள்ளோம் என்றால் சரி. எனது எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் வாதியிடம் தொகை எதுவும் பெறவில்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு நான் செலுத்த வேண்டிய தொகையை ஏமாற்றுவதற்காக பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது அவசர தேவைக்கு வாதியிடம் கடன் பெற்றுக் கொண்டு அவரை ஏமாற்றுவதற்காக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.01.27 17:45:09 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS